# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064859

1. District மாவட்டம் : VELLORE PS காவல்நிலையம்: VIGILANCE AND ANTI — CORRUPTION, VELLORE. Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 2/2020 Date நாள்: 28.02.2020.

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 OF P.C Act 1988

(ii) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்: as amended by

(iii) Act சட்டம்: (AMENDMENT) ACT 2018. Sections பிரிவுகள்: P.C (Amendment) Act 2018.

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 9.1.2020 Date to நாள் வரை: 27.02.2020

Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : — Time to நேரம் வரை : —

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.2.2020 Time நேரம் : 07.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.2.2020 VOLUME-I 2020 Time நேரம் : 07.30 and 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL COMPUTER TYPED

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 5KM's. EAST DIRECTION.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி : OFFICE OF THE SPL. DEPUTY COLLECTOR. STAMPS, COLLECTORATE, VELLORE.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தருபவர் பெயர் M. RANJITHKUMAR (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் MURUGAN

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1995 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் AGRICULTURE (g) Address : முகவரி No. 952, Annaikal street, Erumbuti Village, kuppam post, polur Tk, Tiruvannamalai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. S. Dhinakaran, Special Deputy Collector (STAMPS) Vellore & Tiruvannamalai District, Vellore Collectorate campus, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

"NO-DELAY"

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant: M. [signature] 28/02/2020
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station: [signature] 28
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.2.2020 11.00hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. VIJAY
Rank: நிலை INSPECTOR OF PO[LICE]
VIGILANCE & ANTI-C[ORRUPTION]
VELLORE.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 28.02.2020-ஆம் தேதி காலை 07.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திரு.M.ரஞ்சித்குமார் (25/2020), த/பெ முருகன், எண்.952, ஆனைக்கல் தெரு, இரும்புலி கிராமம், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு கொடுத்த புகாரில் திரு.தினகரன், தனித்துணை ஆட்சியர், முத்திரை, வேலூர் மாவட்டம் என்பவர் அரசு அலுவலை செய்ய லஞ்சம் கேட்பதாக கொடுத்த புகாரின் மீது முதற்கட்ட விசாரணை மேற்கொண்டு தக்க முகாந்திரம் இருந்தபடியால் மேற்படி புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மேற்படி புகார் மனு பின்வருமாறு, அனுப்புநர் M. ரஞ்சித்குமார் த/பெ. முருகன் எண்.952, ஆனைக்கல் இரும்புலி கிராமம், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் 632311 பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர், வேலூர் மாவட்டம். அய்யா, என் பெயர் ரஞ்சித்குமார் நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன் விவசாய தொழில் செய்து வருகிறேன். என் அப்பா பெயர் முருகன் அம்மா ஜெயகாந்தி என் மனைவி பெயர் சரஸ்வதி எனக்கு 2 வயதில் அனீஷ் என்ற ஆண் குழந்தை உள்ளது. என் அப்பா முருகன் உடன் பிறந்தவர் விஜயகுமாரி எனக்கு அத்தை உறவு முறை அவர் இறந்துவிட்டார் அவரது மகன் ராஜவேலு. எங்களுடைய பூர்வீக சொத்து போளூர் தாலுக்கா இரும்புலி கிராமத்தில் சர்வே எண்.139/3B1-ல் விவசாய நிலம் 1.47 சென்ட் உள்ளது அதனை என் அப்பா முருகனும் என் அத்தை மகன் ராஜவேலுவும் கடந்த 22.08.2019 அன்று திருவண்ணாமலை மாவட்டம் கண்ணமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் என் பெயருக்கு கிரையம் செய்து வைத்தார்கள். கிரயத்தின்போது கண்ணமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை முழுவதையும் செலுத்தி உரிய முத்திரை தாள்கள் மற்றும் முத்திரை கட்டணம் செலுத்தி என் பெயருக்கு மேற்படி 1 ஏக்கர் 47 சென்ட் விவசாய நிலத்தை கிரயம் செய்யப்பட்டது. கிரயம் நடந்து முடிந்த அன்றைய

தினம் கிரயத்திற்கான அசல் ஆவணத்தை கண்ணமங்கலம் சார் பதிவாளர் எனக்கு வழங்கவில்லை அசல் ஆவணத்தை வழங்குமாறு கேட்டதற்கு நீ கேட்டவுடன் ஆவணத்தை கொடுக்க முடியாது வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தனித் துணை ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன் நீ அங்கு வாங்கிகொள் என்று சொல்லி என்னை அனுப்பி விட்டார். மேலும் கிரய சொத்திற்கான அசல் ஆவணத்தை பெற பலமுறை கண்ணமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன் உனக்கு வேலூரில் இருந்து கடிதம் வரும் அதன் பின்னர் வேலூர் சென்று வாங்கிகொள் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன் பின்னர் கடந்த 31.12.2019 அன்று வேலூர் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களிடம் இருந்து பதிவு தபால் என்னுடைய வீட்டிற்கு வந்தது அதில் சி.ப.1116/19 KNM என்றும் நாள் 26.12.2019 என்றும் 21 நாட்களுக்குள் என்னுடைய முறையீட்டை தெரிவிக்குமாறும் கு.மு.க ரூ.2,83,191 என குறிப்பிட்டு கடிதம் வரப்பெற்றது. அதனால் கடந்த 09.01.2020 அன்று நான் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களின் அலுவலகத்திற்கு சென்று திரு.தினகரன் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களை சந்தித்தேன் அப்போது அவர் உன்னுடைய அசல் ஆவணத்தை நான் கொடுக்கிறேன் நான் நினைத்தால் மூன்று மடங்கு உனக்கு கட்டணம் செலுத்த வேண்டும் என்று உத்தரவு போடமுடியும் ஆனால் நீ ரூ.50,000/- கொடுத்துவிட்டால் போதும் டாக்குமெண்ட்டை நான் ரிலீஸ் செய்கிறேன் என்றார் அதற்கு நான் நான் சார் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை விவசாய நிலம் சார் நாங்கள் ஏழ்மையான குடும்பம் சார் என்று சொன்னேன் நான் மூன்று மடங்கு வசூல் செய்ய வேண்டும் அப்படி கணக்கு போட்டால் லட்சத்தில் நீ பணம் கட்ட வேண்டி வரும் நான் உன் நிலத்தை நேரில் வந்து பார்க்க வேண்டும் நிறைய செலவு உள்ளது ரூ.50,000/- எனக்கு கொடுத்துவிட்டால் நீ பணம் ஏதும் கட்ட வேண்டியது இல்லை உன்னுடைய கிரய பத்திரம் சரியாக தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று ஆர்டர் போட்டுவிடுகிறேன் இல்லை என்றால் இப்போதைக்கு உனக்கு அசல் பத்திரம் கிடைக்காது என்றார். அதன் பின்னர் நான் அங்கிருந்து

ஊருக்கு வந்துவிட்டேன் பின்னர் கடந்த 24.02.2020 மற்றும் 26.02.2020 ஆகிய இரண்டு தினங்கள் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகத்தில் இருந்து என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு திரு.தினகரன் தனித் துணை ஆட்சியர் அவர்கள் டிரான்ஸ்பரில் போக உள்ளார் உங்களை உடனே வந்து அவர் இருக்கும் போதே வேலையை சிக்கல் இல்லாமல் முடித்து கொள்ளுமாறு சொல்கிறார் என்று தகவல் சொன்னார்கள். அதனால் 27.02.2020 அன்று மதியம் நான் வேலூர் வந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தனித்து துணை ஆட்சியர் திரு.தினகரன் அவர்களை சந்திக்க சென்று பார்த்தபோது அவர் அலுவலத்தில் இல்லை அங்கிருந்தவர் இயா மீட்டிங்கில் உள்ளார் கொஞ்ச நேரம் காத்திரு வந்துவிடுவார் என்று சொன்னார்கள் அதனால் நான் காத்திருந்தேன். அதன்பின்னர் மாலை சுமார் 6.30 மணிக்கு மேல் திரு.தினகரன் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்கள் அவருடைய அலுவலக அறைக்கு வந்தார். நான் அவரை சந்தித்தபோது என்னப்பா இவ்வளவு நாள் கழித்து வந்திருக்கிறாய் உனக்கு போன் செய்து சொன்னால் தான் வருவியா கொடுக் வேண்டியதை கொடுத்துவிட்டு உன் வேலையை சிக்கல் இல்லாமல் முடித்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இல்லையா என்றார் அதற்கு நான் சார் என்னிடம் பணம் இல்லை என்றேன். சரி நான் இரண்டு மடங்கு மூன்று மடங்கு பணம் கட்ட வேண்டும் என்றும் உன் கிரய சொத்தை நேரில் வந்து பார்த்து லட்ச கணக்கில் பணம் கட்டவேண்டும் என்று எழுதி அனுப்பினால் என்ன செய்வாய் ரூ.60,000/- கொடுத்தால் அசல் ஆவணத்தை இப்போதே உன் நிலத்தை பார்க்காமலேயே எல்லாம் முடிந்து சரியாக உள்ளதாக எழுதி ஆவணத்தை ரிலீஸ் செய்கிறேன் என்று சொன்னார், அதற்கு நான் சார் ஏற்கனவே பார்த்தபோது ரூ.50,000/- சொன்னீர்கள் சார் என்றேன் அதற்கு அவர் நாட்கள் அதிகமாக போய்கொண்டிருந்தால் பணமும் அதிகமாகி கொண்டே தான்போகும் சரி ரூ.50,000/- எனக்கு கொடுத்துவிடு ஆவணத்தை ரிலீஸ் செய்துவிடுகிறேன் என்றார் அதற்கு நான் எவ்வளவோ கெஞ்சி கேட்டும் திரு.தினகரன் ஒத்துக்கொள்ளவில்லை எனக்கு டைம் இல்லை நீ ரூ.50,000/-தை ரெடி செய்து கொண்டு 28.02.2020 அன்று என்னை

வந்துபார்த்தால் உன் வேலை முடியும் இல்லை என்றால் நீ லட்ச கணக்கில் பணத்தை அரசாங்கத்திற்கு கட்டணமாக கட்டவேண்டியிருக்கும் இதற்கு மேல் உன் விருப்பம் என்று கண்டிப்புடன் சொல்லி என்னை அனுப்பிவிட்டார். திரு.தினகரன் தனித் துணை ஆட்சியர் முத்திரை வேலூர் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.50,000/- பணத்தை அவருக்கு லஞ்சமா கொடுத்து நான் கிரயமாக பெற்ற சொத்திற்கான அசல் ஆவணத்தை தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களிடம் இருந்து பெற எனக்கு விருப்பம் இல்லை ஆகையால் திரு.தினகரன் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) வேலூர் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் கீழ்கண்ட ஆவணங்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd/-xxxxx (M.Ranjithkumar) 28/02/2020 இணைப்பு: 1. தனித்துணை ஆட்சியர் (முத்திரை) வேலூர் அவர்களின் சி.ப.1116/19 KNM நாள் 26.12.2019 நாளிட்ட அசல் கடிதம் மற்றும் கடிதம் வரப்பெற்ற உரை. 2. வருவாய் துறையில் இருந்து பெற்ற புல எண் 139 3B1 என்ற நில உரிமை விபரங்கள் சான்று. 3. கல்பட்டு கிராம நிர்வாக அலுவலர் சர்வே எண்.139/3B1 விளை நிலம் என்று வழங்கிய சான்று.

Sir,

Received the complaint on 28.02.2020 at 07.30 hrs, after conducting a preliminary enquiry, the information contained in this complaint discloses a cognizable offence, today on 28.02.2020 at 10.00 hrs a case was registered in Vellore V&AC Cr.No.2/2020, u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018. The FIR in original along with the complaint with enclosures was sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned. (Sd/-xxxxxx) 28/2/20 S.VIJAY, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Vellore.

28/2/2020
(S.VIJAY)
Insp/VACD/VLR